உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

6. தகவல் கோரல்

ஓர் அமைச்சர் பற்றி 'துக்ளக்' பத்திரிகையில் செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு) என்ன? அரசன், உங்கள் ஜெக. வீரபாண்டியன்தான் பேசுகிறார்!

***திரு. ப. அரசன்:** ஒரு நிமிஷம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கால்நடை பாரமரிப்புத் துறை மானியக் கோரிக்கையிலே விவாதம் நடைபெற இருக்கிறது. நம்முடைய 'துக்ளக்' பத்திரிகையிலே இன்றைக்கு நம்முடைய கால்நடைத் துறை அமைச்சர் அவர்களைப்பற்றி ஒரு செய்தி வந்திருக்கிறது. அது எந்த அளவிற்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. Question hour முடிந்தவுடன் சொல்ல வேண்டும் அதையெல்லாம். மாண்புமிகு ஜெக. வீரபாண்டியன். (குறுக்கீடு) குறிப்பை ஜெக. வீரபாண்டியனிடம் கொடுங்கள். அவர் நன்றாகப் படிப்பார். அவரிடம் கொடுங்கள். (குறுக்கீடு) Zero hour-ல்தான் ஏதாவது பிரச்சினையைக் கேட்க வேண்டும்; சொல்ல வேண்டும்.

5. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு

(ஆ) கோரிக்கை எண் 16–கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கைத்தறி மற்றும் துணி நூல்

} தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2004–2005 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். திரு. ஜெக. வீரபாண்டியன்.